# அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதின நிருபம்

## கிறிஸ்தவுக்குள் விடுதலை

# எபேசியருக்கு எழுதின நிருபம்

- எபேசு பட்டணம் சின்ன ஆசியாவின் (தற்போதைய துருக்கி) மேற்கில் இருந்த முக்கிய பட்டணம்.
- பிரதான வியாபாரபபதையில் அமைந்த துறைமுகம் அங்கே இருந்தது.
- எபேசு ஒரு வியாபார நகரமாக விளங்கியது. ரோம தேவதையான தியானாள் (கிரேக்கத்தில் ஆர்டிமிஸ்) என்னும் பெண்கடவுளுக்கான பிரமாண்டமான கோயில் அங்கே இருந்தது (அப் 19:23-31)
- பவுல் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக மூன்று ஆண்டுகள் எபேசுவை மையமாக கொண்டு இயங்கினார்(அப் 19:10). அங்கிருந்த சபையானது கொஞ்சக்காலம் சுடர்விடும் சபையாக இருந்தது.
- பின்பு அதற்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது (வெளி 2:1-7)
    - அதிகாரங்கள் 6
    - வசனங்கள் 155

# பின்னணி

- பவுல் ரோம சிறைச்சாலையில் முதல் முறை அடைக்கப்பட்டிருந்தபோது, "சிறைச்சாலை நிருபங்கள்" என்று பொதுவாக அழைக்கப்படும் நான்கு நிருபங்களை எழுதினார். அதில் ஒன்று எபேசியருக்கு எழுதிய நிருபம் (3:1,4:1)
- பிலிப்பியர், கொலோசேயர், பிலமோன் ஆகியவை மற்ற மூன்று நிருபங்கள்.
- பவுலின் மற்ற நிருபங்களைபோல எபேசியருக்கான நிருபம் ஒரு தவறை சுட்டிக்காட்டவோ, துர்உபதேசத்தை கடிந்துகொள்ளவோ, உள்ளூர் திருச்சபையில் உள்ள குறிப்பான பிரச்சினையை குறித்து பேசவோ எழுதப்படவில்லை.
- மாறாக பவுல் கிறிஸ்துவுக்குள் கிறிஸ்தவர்களின் நிலை குறித்த மாபெரும் கருத்தை குறித்து எழுதுகிறார்.
- அவரது வாசகர்களுக்காக அவர் ஜெபித்ததுபோல, அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களை அறிந்திருக்க வேண்டும் என்பது அவரது விருப்பமாயிருந்தது.

  1. தேவனின் அழைப்பினால் உண்டாயிருக்கிற நம்பிக்கை என்ன 1:18
  2. பரிசுத்தவான்களிடத்தில் தேவனுடைய சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் என்ன 1:18
  3. விசுவாசிக்கிறவர்களுக்கு தேவனுடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் என்ன 1:19

- சபையை கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பிட்டு பழைய ஏற்பாட்டோடு உள்ள தொடர்பை எபேசிய நிருபத்தில் காண்பித்திருக்கும் விதம் ஒரு அதிரவைக்கும் கருத்தாக (யூதர்களுக்கு) அமைந்துள்ளது (5:32)

# பின்னணி

- "புறஜாதிகள். இஸ்ரவேலர்களோடு, உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளான வர்களாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன்பங்காளி களுமாயிருக்கிறார்களென்பது" முன்பு வெளிப்படுத்தப்படாத சத்தியமான, சபையைக் குறித்த ஆச்சரியமான இரகசியம் (3:6) இந்த இரகசியம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கு மறைக்கப்பட்டிருந்தது (3:5,9)
- தேவனை உண்மையாய் பின்பற்றி வந்த இஸ்ரவேலர்கள் தாங்கள் மாத்திரமே தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் என்று நினைத்தார்கள் (உபா 7:6).
- இப்போது புதிய வடிவமாக புறஜாதிகளுக்கும் சம அந்தஸ்தை வழங்கி அவர்களை சமமானவர்களாக அங்கீகரிப்பதென்பது யூதர்களுக்கு மிகவும் கடினமான காரியமாய் இருந்ததோடு. யூத விசுவாசிகளுக்கும், புறஜாதியில் இருந்து விசுவாசத்திற்குள் வந்தவர்களுக்கும் இடையில் பல பிரச்சினைகளை தோற்றுவித்தது.
- சபையைக் குறித்த இரகசியத்தை பவுல் "கிறிஸ்துவின் மணவாட்டி" என்று குறிப்பிடுகிறார். இது பழைய எற்பாட்டில் கேள்விப்பட்டிராத ஒரு கருத்து.
- முதல் 3 அதிகாரங்களில் பவுல் தனது சொந்த ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக அவாகள் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விபரிக்கிறார்.
- இறுதி 3 அதிகாரங்களும் அவ்வாறு உயர்வாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்பதை விபரிக்கிறார் 4:1,17,5:2,8,15

# எபேசிய நிருபத்தின் முக்கிய பகுதிகள்

- அறிமுகம் 1:1-2
- கொள்கை: கிறிஸ்துவுக்குள் நமது ஐசுவரியம் 1:3-3:21
- ஆவிக்குரிய விதத்தில் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் காரியங்கள் 1:3-4
  1. பிதாவிடத்திலிருந்து 1:4-6
  2. குமாரனிடத்திலிருந்து 1:7-12
  3. ஆவியானவரிடத்திலிருந்து 1:13-14
  4. 1வது ஜெபம்: பிரகாசமான மனக்கண்களுக்காக 1:15-23
- ஆவிக்குரிய விதத்தில் நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் நிலை 2:1-22
  1. உயர்த்தப்பட்டு சிங்காசனத்தில் உட்காருதல் 2:1-10
  2. ஒப்புரவாக்கப்பட்டு ஆலயத்தில் வைக்கப்படுதல் 2:11-22
  3. 2வது ஜெபம்: செயற்படவேண்டி (3:1-21ல் 2-13 நீங்கலாக)
- செய்கை: கிறிஸ்துவுக்குள் நமது கடமைகள் 4:1-6:20
- ஐக்கியத்தில் நடக்க அழைப்பு 4:1-16
  1. சரியான நடக்கையோடு ஆவியின் ஒருமைப்பாட்டை காத்தல் 4:1-7
  2. அளிக்கப்பட்ட கிருபையினால் கிறிஸ்துவின் சரீரத்தை சீர்ப்படுத்துதல்4:8-16
- பரிசுத்தத்தில் நடக்க அழைப்பு 4:17-5:12
  1. மற்ற புறஜாதியார்போல நடக்கக்கூடாது 4:17-32
  2. அன்பிலே நடத்தல் வேண்டும் 5:1-6
  3. ஒளியின் பிள்ளைகளைப்போல நடக்கவேண்டும் 5:7-14
  4. ஞானமுள்ளவர்களைப்போல நடக்க வேண்டும் 5:15-21
- இணக்கமுள்ளவர்களாய் நடக்க அழைப்பு 5:22-6:9
  1. கணவன் மனைவி 5:22-33
  2. பெற்றோர் பிள்ளைகள் 6:1-4
  3. எஜமானர்கள் வேலையாட்கள் 6:5-9
- ஜெயம்பெற்றவர்களாய் நடக்க அழைப்பு 6:10-20
  1. கர்த்தருடைய வல்லமையில் உறுதியாய் நிற்றல் 6:10-13
  2. கர்த்தருடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்தவர்களாய் நிற்றல் 6:14-20
- முடிவுரை 6:21-24